IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 77/2021

Deposition of Witness : DW 1

Name : அண்ணாதுரை (வயது – 63)

Father's Name /W/o : த/பெ ஏழுமலை

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 01.11.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து சம்பந்தமாக வாதி வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பிய பிறகு தான் பிரச்சினை தீவிரம் ஆனது என்றால் இல்லை. வாதிக்கும் எனக்கும் வழக்கு சொத்து சம்பந்தமாக எந்த பிரச்சினையும் இல்லை என்றால் பிரச்சினை உள்ளது. வழக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சினை எந்த தேதியில் இருந்து ஆரம்பித்தது என்றால் 2019 ஆண்டிலிருந்தே ஆரம்பித்தது. இந்த வழக்கு படி 25.12.2018 தேதியில் பிரதிவாதிகள் 2 ஆம் வாதியிடம் தாவா சொத்தை விவசாயம் செய்வதற்காக கேட்டார்கள் அவர் அனுபவித்த பிறகு தான் 2019 ஆண்டில் பிரச்சினை ஆரம்பித்தது என்றால் இல்லை நான் கேட்டு வாங்கவில்லை.

2. எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எனக்கும் வாதிக்கும் 2019 ஆண்டிலிருந்து தாவா சொத்து குறித்து பிரச்சினை தொடங்கியது என்று தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சில இடத்தில் மாற்றி சங்கதிகள் தெரிவித்துள்ளேன்

என்றாலும் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்ட ஆவணங்கள் குறித்து சங்கதிகளை கூடுதலாக பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் வழக்கிற்கு பின்னிட்டு நான் எந்த ஆவணத்தையும் வாங்கவில்லை.

3. என் எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் ஆறுமுகம் மற்றும் ஏழுமலை ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஆறுமுகம் இறந்த பிறகு என் தந்தை பராமரிப்பில் இருந்தார்கள் என்று நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 04.06.1971 தேதியில் 2 ஆம் வாதிக்கு திருமணம் நடைபெற்ற பிறகு என் தந்தையின் பாதுகாப்பில் எத்தனை ஆண்டுகளாக இருந்தார் என்றால் 6 மாதத்தில் தனியாக சென்றுவிட்டார்.

4. 1971 ஆண்டு வாதி திருமணம் நடந்துபோகும் வரை அவர் என் தந்தை பாதுகாப்பில் இருந்ததால் என் தந்தை சொத்திற்கு அவருக்கு உரிமை உள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.615/1967 1967 ஆம் ஆண்டில் என் தந்தை வாங்கிய சொத்து பத்திரம் என்றால் நான் பிறக்கவில்லை எனக்கு தெரியாது. 1971 ஆண்டு டிசம்பர் வரை 2 ஆம் வாதி என் தந்தையின் பாதுகாப்பில் இருந்ததால் மேற்படி ஆவண எண்.615/1967 சொத்திற்கும் உரிமை உள்ளது என்றால் அவருக்கு உரிமை இல்லை.

5. என் தந்தை 1955,1956 ஆண்டுகளில் சொத்து வாங்கியுள்ளதாக என் தாவாவில் தெரிவித்துள்ளேன் என்றாலும் 1955,1956 ஆண்டிற்கான பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 86 செண்ட், 1956 ஆண்டிற்கான பத்திரத்தில் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.25 செண்ட். என் எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி இரண்டு சொத்திற்கும் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றாலும் அதில் நான் எவ்வளவு கைப்பற்றியுள்ளேன் என்றால் 1 ஏக்கர் 5 1/2 செண்ட் வந்தது. 1 ஏக்கர் 05 1/2 செண்ட் நிலத்திற்கு எல்லை உள்ளதா என்றால் உள்ளது. கிழக்கு எங்கள் நிலம், மேற்கு ஆறுமுகம் பாகம் , வடக்கில் சங்கரம்பாடி ஆறு, தெற்கு பாலாறு.

6. 86 செண்ட்க்கும் 1 1/4 ஏக்கர் செண்ட்யையும் பிரிப்பது எது என்றால் இரண்டு செண்ட்டையும் சேர்த்து மேல்பக்கம் ஆறுமுகத்திற்கும் கீழ்ப்பக்கம் என் தந்தைக்கு ஒதுக்கப்பட்டது. நிலத்தில் வரப்பு எந்த திசையில் தொடங்கி எந்த திசையில் முடிவடைகிறது என்றால் சங்கரபாடி ஆற்றுக்கும் பாலாற்றுக்கும் இடையில் வடக்கு தெற்கு வரப்பு உள்ளது. என் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் போர் உள்ளது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

7. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் போர் உள்ளதா என்றால் தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ளதா என்றாலும் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கிணறு உள்ளதா என்றால் கிணறு தெரியவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தபின் வாதிக்கும் எங்களுக்கும் பிரச்சினை நடைபெற்றதா என்றால் வாதிகள் வந்து பிரச்சினை செய்தார்கள் சில சமயம் பிரச்சினை நடைபெறும்.

8. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது யார் என்றால் நான் மற்றும் என் தம்பி இருக்கிறோம். நான் வாதியிடம் பிரச்சினை செய்தபோது எடுத்த புகைப்படம் என்றால் இல்லை புகைப்படத்தில் உள்ள இடம் என் இடம் நாங்கள் விவசாயம் செய்யும் போது புகைப்படம் எடுத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் VIDEO ஆதாரத்தில் நான் பிரச்சினை செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் VIDEO இல் நான் உள்ளேனா என்றால் என் இடத்தில் உள்ளபோது VIDEO எடுக்கப்பட்டது.

9. என்னிடம் காட்டப்படும் தாவா சொத்தில் பிரதிவாதி இருக்கும் புகைப்படம் மற்றும் VIDEO PENDRIVE வா.சா.ஆ – 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 86 செண்ட் மற்றும் 1 ஏக்கர் 5 1/2 பிரிக்கப்படவில்லை வரப்பு போடாமல் 1955,1956 ஆண்டுகளில் எப்படி இருந்ததோ அப்படியோ தான் உள்ளது என்றால் வரப்பு போட்டுள்ளத வழக்கறிஞர் சொல்வது தவறு. நான் வாதியின் அமைதியான அனுபவத்தில் இடையூறு செய்கிறேன் என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகும் பிரச்சினை செய்கிறேன் என்றால்

நான் எந்த பிரச்சினை செய்யவில்லை அவர்கள் தான் தொந்தரவு செய்கிறார்கள்.

10. வாதிகளை இடையூறு செய்வதால் மற்றும் அந்நியபடுத்துதல் ஏற்படுத்தியதால் அவலூர் காவல்நிலையத்தில் 06.1.2022 தேதியில் வாதி புகார் அளித்துள்ளார் என்றாலும் அவர்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளார் என்றும் வா.சா.ஆ – 8 ஆக மேற்படி புகாரை குறியீடு செய்து வாதி நான் இடையூறு செய்ததை சாட்சியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் தான் தகராறு செய்தார்கள் அவர்களே புகார் அளித்தார்கள் காவல் நிலையத்தில் செய்தார்கள், மேற்படி ஒத்துக்கொள்ளாமல் வழக்கு தாக்கல் செய்கிறோம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

11. என் மீதும் என் தம்பிகளின் மீதும் வாதி வாலாஜாபாத் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தனிநபர் வழக்கு எண்.32/2023 தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டிய புகைப்படம் நானும் என் குடும்பத்தாரும் தாவா சொத்தில் அந்நியதாரராக இடையூறு செய்ததற்கு சாட்சியாக உள்ளது என்றால் இல்லை. நாங்கள் எங்கள் சொத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது வாதிதான் இடையூறு செய்தார்கள்.

12. 1956 தேதியிட்ட ஆவணம் வாதியின் கையில் இல்லை என்றாலும் என்னிடம் தான் அசல் பத்திரம் உள்ளது என்ற விபரம் 2 ஆம் வாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் பத்திரம் உள்ளது என்று அவருக்கு தெரியும். மேற்படி விபரம் எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் ஏகநாதனுக்கு தெரியும் தெரியாது என்ற விபரம் எனக்கு தெரியாது அதனால் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை. 2 ஆம் வாதி அவர் தாவாவில் அசல் பத்திரம் தொலைந்துவிட்டது என்றும் அவரிடம் இல்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் தொலையவில்லை அசல் பத்திரம் சொத்திற்கு சொந்தகாரரிடம் உள்ளது.

13. ஏகநாதன் பெற்றோரை அவர் சிறுவயதில் இருக்கும் போது இறந்துவிட்டதால் என் தந்தை அவரை பாதுகாத்து அவர் பெயரில் உள்ள சொத்தை என் தந்தை ஏகநாதன் பெயரை அழித்து அவர் பெயரை எழுதி கொண்டார் என்றால் சரியல்ல. எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பாதகமான உடைமை அவரிடமிருந்து உள்ளது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சொத்து பாகப்பிரிவினை ஆனதிலிருந்து நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.

14. ஆறுமுகம் மற்றும் ஏழுமலையும் எப்போதும் கூட்டுக்குடும்பமாக இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தைபொங்கல் அன்று சொத்து பாகப்பிரிவினை ஆனது என்று நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1955,1956 ஆவணங்கள் வாதிகள் பெயரில் தான் உள்ளது என்றாலும் 1955 பத்திரத்தில் இரண்டாம் வாதி தந்தை அழித்து என் தந்தை பெயரை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்த எந்த பாகப்பிரிவினைக்கும் உட்படவில்லை இன்றைய தேதிவரை வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல.

15. 2 ஆம் வாதியின் தந்தை இறந்ததற்கு பிறகு அவரது மாமன் தான் வளர்த்தார் என்றாலும் என் தந்தை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் சொத்து பாகப்பிரிவினை நடைபெற்றதற்கு சாட்சி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்த போது 25.12.2008 தேதியில் நாங்கள் சொத்தில் விவசாயம் செய்வதற்கு அவரிடம் அனுமதி கேட்டேன் என்றாலும் அதன் பிறகு நாங்கள் சொத்தை விற்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பதற்கு நான் முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

16. தாவா சொத்தை விற்க முயற்சி செய்ததற்கு இந்த நீதிமன்றம் மற்றும் அவலூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து குற்றவியல் வழக்கு நடந்து வருகிறது என்றால் நாங்கள் இடையூறு செய்யவில்லை. இந்த வழக்கு காலதோஷத்திற்கும் பாதகஉடைமைக்கும் வாதிக்கு எதிராக இல்லை என்றால்

சரியல்ல. சாகுபடி அடங்கல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது நான் பெற்றேன் என்றால் 27.10.2021 அன்று சாகுபடி அடங்கல் வாங்கினோம். மேற்படி அடங்கல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.